செ.வெ.எண்:19/பிப்ரவரி நாள்:12.02.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கச்சத்தீவில் உள்ள புனித அந்தோணியர் தேவாலயத்தில் திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கச்சத்தீவில் உள்ள புனித அந்தோணியார் தேவாலயத்தில் நடைபெறவுள்ள திருவிழாவில் கலந்து கொள்வதற்காக செல்லவுள்ள யாத்திரிகர்களை பாதுகாப்பாக அனுப்பி திரும்ப அழைத்து வருதல் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று (12.02.2020) நடைபெற்றது. இராமநாதபுரம் சார் ஆட்சியர் திரு.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப, அவர்கள், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஆ.தங்கவேலு அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கச்சத்தீவில் உள்ள புனித அந்தோணியார் தேவாலயத்தில் வருகின்ற 06.03.2020 மற்றும் 07.03.2020 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள திருவிழாவில் கலந்து கொள்வதற்கு செல்லும் யாத்திரிகர்கள் அனைவரும் பாதுகாப்பாகவும், பொறுப்புடனும் சென்று வர வேண்டும்.

திருவிழாவிற்கு செல்லும் அனைத்து யாத்திரிகர்களும் கட்டாயமாக உயிர்காக்கும் மிதவை (Life Jacket) அணிய வேண்டும். அவசர சூழ்நிலைக்கு ஏற்றவாறு யாத்திரிகர்கள் புறப்படும் இடத்தில் மருத்துவ குழுவினர், தீயணைப்புத் துறையினர் ஆகியோர் தயார் நிலையில் இருந்திட வேண்டும். யாத்திரிகர்கள் செல்லும் ஒவ்வொரு படகிலும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் மட்டுமே யாத்திரிகர்கள் செல்வதை உறுதி செய்திட வேண்டும். கச்சத்தீவு யாத்திரைக்காக பயன்படுத்தப்படவுள்ள படகுகளின் உரிமம் மற்றும் காப்பீடு குறித்த விபரங்களை மீன்வளத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்து உறுதி செய்திட வேண்டும். குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் முழுமையாக செய்திட வேண்டும். இதுதவிர யாத்திரைக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் காவல்துறை, இந்திய கடலோர பாதுகாப்பு படை, இந்திய கப்பற்படை, சுங்கத்துறை மற்றும் உளவுத்துறை பணியகம் சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டம் தவிர பிற மாவட்டங்களில் இருந்து கச்சத்தீவு விழாவிற்கு செல்ல விண்ணப்பிக்கும் நபர்கள் சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் தடையின்மைச் சான்று (NOC) பெற்று சமர்ப்பிக்க வேண்டும். மேலும் பாலித்தீன் பைகள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் போன்றவற்றையும் படகுகளில் எடுத்துச் செல்லவும், அங்கிருந்து எடுத்து வரவும் அனுமதி இல்லை. மேலும், இத்திருவிழாவை சிறப்பாக கொண்டாட சென்று வருவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கிடுமாறு என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் சுங்கத்துறை துணை ஆணையர் திரு.எல்.ஜெய்சன் பிரவீன்குமார்,இ.வ.ப., பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.தங்கவேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு, மீன்வளத்துறை துணை இயக்குநர் திருமதி.பிரபாவதி உள்பட அரசு அலுவலர்கள், கச்சத்தீவு யாத்திரைக்குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**